


# 29. 08. 2025

## தலைப்பு செய்திகள்

**1.** நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பொதுத்துறை நிறுவனங்கள் ஆற்றல் மிகு கருவிகளாக திகழ்கின்றன என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

2. இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தில் ஜப்பானிய நிறுவனங்கள் முக்கிய பங்காற்றுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்தார்.

3. கேலோ இந்தியா போன்ற திட்டங்களால் நம் நாடு விளையாட்டுத்துறையில் புதிய உச்சங்களை எட்டியுள்ளதாக மத்திய அமைச்சர் டாக்டர் எல்.முருகன் எடுத்துரைத்தார்.

**4.** தமிழ்நாட்டில் தொழில் தொடங்க, வெளிநாட்டினர் அதிக ஆர்வம் காட்டுவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

**5.** வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலய ஆண்டு பெருவிழா இன்றுமாலை கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

## இனி விரிவான செய்திகள்

**********

### திரௌபதி முர்மு

நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக உள்ளடக்கத்திற்கான சக்தி வாய்ந்த கருவியாக பொதுத்துறை நிறுவனங்கள் விளங்குவதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியிருக்கிறார்.

புதுதில்லியில் 2022-23ம் ஆண்டிற்கான பொதுத்துறை நிறுவனங்களுக்கான விருதுகளை இன்று வழங்கி பேசிய அவர், தொழில்மயமாக்கல், உள்கட்டமைப்பு மேம்பாடு, சமநிலையான பிராந்திய வளர்ச்சி போன்றவற்றிற்கு இந்நிறுவனங்கள் அடித்தளமிட்டுள்ளதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய மத்திய நிதித்துறை இணை அமைச்சர் திரு.பங்கஜ்சவுத்ரி தேசத்தை கட்டமைப்பதில் பொதுத்துறை நிறுவனங்கள் முக்கிய பங்காற்றுவதாக குறிப்பிட்டார்.

**********

**பிரதமர்**

உலகின் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்வதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் 15ஆவது இந்தியா – ஜப்பான் வருடாந்திர உச்சிமாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், உலகின் 3ஆவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

சீர்திருத்தம், செயல்திறன் மாற்றம் என்ற அணுகுமுறையே பொருளாதார வளர்ச்சிக்கு காரணம் என்றும், குறிப்பிட்டார்.

இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தில் ஜப்பானிய நிறுவனங்கள் முக்கிய பங்காற்றுவதாகவும் பிரதமர் எடுத்துரைத்தார்.

இந்தியாவில் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திர தன்மை, கொள்கைகளில் வெளிப்படைத்தன்மை நிலவுவதாக குறிப்பிட்டார்.

இந்தியாவின் வளர்ச்சி பயணத்தில் ஜப்பான் எப்போதும் முக்கிய பங்களிப்பு நாடாக விளங்குவதாகவும், மெட்ரோ ரயில் முதல் - உற்பத்தி வரையிலும்,

செமி கண்டெக்டர் முதல் - ஸ்டார்ட் அப்வரையிலும், ஜப்பான் நிறுவனங்கள் 40 பில்லியன் டாலருக்கும் அதிகமான முதலீடுகள் இந்தியாவில் மேற்கொண்டிருப்பதாக கூறினார்.

இந்தியாவில் வணிகம் செய்யும் நடைமுறைகள் எளிமையாக்கப்பட்டுள்ளதாகவும், ஒற்றை சாளர ஒப்புதல் முறை கொண்டு வரப்பட்டுள்ளதாக கூறினார்.

செயற்கை நுண்ணறிவு மின்குறைகடத்தி, குவாண்டம் கணினி, உயர் தொழில்நுட்பம் மற்றும் விண்வெளி துறையில் துணிச்சலான மற்றும் லட்சிய முயற்சிகளை இந்தியா மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தியாவின் திறமையும் - ஜப்பானின் தொழில்நுட்பமும் இணைந்து இந்த நூற்றாண்டில் தொழில்நுட்ப புரட்சியை ஏற்படுத்த முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

ஜப்பானின் ஒத்துழைப்புடன் மும்பை அஹமதாபாத் புல்லட் ரயில் பணிகள் நடைபெற்று வருவதை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

**********

**தேசிய விளையாட்டு தினம்**

தேசிய விளையாட்டு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

புகழ்பெற்ற ஹாக்கி வீரர் மேஜர் தியான்சந்தின் பிறந்த நாளை நினைவு கூறும் வகையில் ஆண்டுதோறும் இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.

“அமைதியான, உள்ளடக்கிய சமூகத்தை ஊக்குவிக்கும் விளையாட்டு” என்பதே இந்தாண்டின் கருப்பொருளாகும்.

இந்நாளை ஒட்டி பிரதமர் திரு.நரேந்திரமோடி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் இந்தியாவை உலகின் விளையாட்டு மையமாக மாற்ற அரசு உறுதிபூண்டுள்ளதாக கூறியுள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளில் விளையாட்டு துறை பெரும் மாற்றங்களை கண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்ட செய்தியில் பிரதமரின் தலைமையில் உலகதரம் வாய்ந்த விளையாட்டு வசதிகள், கேலோ இந்தியா போன்ற திட்டங்களால் தேசம் விளையாட்டு துறையில் புதிய உச்சங்களை எட்டி வருவதாக கூறியுள்ளார்.

2030ஆம் ஆண்டு காமன்வெல்த் போட்டிகளை இந்தியாவில் நடத்துவதற்கான முயற்சி, வளர்ச்சி அடைந்த இந்தியா இலக்கை எட்ட ஒரு திருப்புமுனையாக அமையும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**********

**கீர்த்திவர்த்தன்சிங்**

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் நடவடிக்கைகளால் நாட்டின் பொருளாதாரம் வலுப்பெற்றுள்ள நிலையில் இந்திய பொருட்களுக்கு அமெரிக்கா விதித்துள்ள 50 சதவிகித சுங்கவரி உயர்வு பாதிப்பை ஏற்படுத்தாது என்று மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் திரு.கீர்த்திவர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

உத்திரபிரதேச மாநிலத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் வெளிப்புற காரணிகள் பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதை நமது அரசு அனுமதிக்காது என்றார்.

பிரதமர் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சரின் முயற்சிகளால் உலக நாடுகள் குறிப்பாக தெற்கு நாடுகள் இந்தியாவுடன் துணை நிற்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**********

**அஷ்விணி வைஷ்ணவ்**

உலகின் செமிகண்டெக்டர் நிபுணர்களின் பற்றாக்குறையை வரும் 2030ஆம் ஆண்டிற்குள் இந்தியா குறிப்பிடத்தக்க அளவு நிரப்பும் என மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

குஜராத்தில் செமிகண்டெக்டர் சோதனை ஆலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், நாட்டில் திறன்மிக்க ஊழியர்களை உருவாக்க 270 பல்கலைகழங்களுக்கு அதி நவீன சிப் உற்பத்தி தொழில்நுட்பம் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

**********

**நீதிபதிகள்**

உச்சநீதிமன்ற நீதிபதிகளாக குஜராத் மாநிலத்தை சேர்ந்த விபுல் பஞ்ச்சோலி மற்றும் மத்திய பிரதேசத்தை சேர்ந்த அலோக் அராதே ஆகியோர் இன்று பதவி ஏற்றனர்.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் அவர்களுக்கு பதவி பிரமானம் செய்துவைத்தார்.

இதன்மூலம் தலைமை நீதிபதி உட்பட 34 நீதிபதிகளுடன் உச்சநீதிமன்றம் அதன் முழுமையான எண்ணிக்கையை பெற்றுள்ளது.

**********

**முதலமைச்சர்**

தமிழ்நாட்டில் தொழில் தொடங்க, வெளிநாட்டினர் அதிக ஆர்வம் காட்டுவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று, நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கடந்த 4 ஆண்டுகளில் 10 லட்சம் கோடி தொழில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக கூறினார்.

தமிழகத்திற்கு முதலீடுகளை ஈர்க்க அரசு முறை பயணமாக நாளை ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளுக்கு செல்ல இருப்பதாகவும் தெரிவித்தார்.

**வாய்ஸ்**

**********

**மா.சுப்பிரமணியன்**

சென்னை கிண்டியில் உள்ள ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் அமைக்கப்பட்ட மழை நீர் சேகரிப்பு குளங்களை ஆழப்படுத்தும் பணிகளை மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் இன்று ஆய்வு செய்தார்.

குளங்களின் நீர்தேக்கும் திறனை இரு மடங்காக அதிகரிக்க நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார்.

**********

**காலிப்பணியிடம்**

தமிழ்நாட்டில் வருவாய் துறையில் மூன்றாண்டுகளுக்கு மேல் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

அனைத்து மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரே விதிகளுக்குட்பட்டு இப்பணியிடங்களை நிரப்பவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**********

**விழிப்புணர்வு**

**வேலூர் மாவட்டத்தில் 40ஆவது தேசிய** கண்தான இருவார விழாவை முன்னிட்டு கண்தானம் குறித்த மனித சங்கிலியை ஆட்சித்தலைவர் திருமதி சுப்புலெட்சுமி இன்று தொடங்கிவைத்தார்.

மருத்துவ கல்லூரியை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணாக்கர் பங்கேற்று விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

**இதேபோல் ராமநாதபுரத்தில் நடைபெற்ற** விழிப்புணர்வு பேரணியில் பதாகைகளை ஏந்தியபடி மாணாக்கர்கள் ஊர்வலமாக சென்றனர்.

இந்நிகழ்ச்சியில் கண் தானம் தொடர்பான விழிப்புணர்வு பணிகளில் சிறப்பாக பணியாற்றிய தொண்டு நிறுவனங்கள் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு கேடயங்களை ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் வழங்கினார்.

**********

**சேலம் வாய்ஸ்:**

விளையாட்டுத்துறைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் காரணமாக, சேலம் மாவட்டத்திலிருந்து தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு வீரர்கள் அதிகளவில் உருவாகி வருகின்றனர்.

மகளிருக்கான முக்கியத்துவத்தை விளையாட்டுகள் நிலைநிறுத்துவதாக, உயரம் தாண்டுதலில் 1.82 மீட்டர் தாண்டி மாநில அளவில் புதிய சாதனை படைத்த, சேலத்தை சேர்ந்த விளையாட்டு வீராங்கனை **கோபிகா** தெரிவிக்கிறார்…

- - **வாய்ஸ்** - -

- **********

**வேளாங்கண்ணி**

நாகை வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலய ஆண்டு பெருவிழா இன்றுமாலை கொடியேற்றத்துடன் தொடங்குகிறது..

லட்சக்கணக்கான பக்தர்கள் வேளாங்கண்ணியில் குவிந்த வண்ணம் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**********

**கோவில்**

திருவள்ளூர் மாவட்டம் சிறுவாபுரியில் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த தீண்டாதிருமேனி ஸ்ரீவரதராஜபெருமாள் கோவில் கும்பாபிஷேகம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

**********

**மேட்டூர்**

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு இன்றுகாலை 15 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

காவிரி டெல்டா பாசன பகுதிகளில் தேவை அதிகரித்திருப்பதால் நீர் திறப்பு அதிகரிக்கப்பட்டதாக நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அணையின் நீர்மட்டம் 119 அடியாகும்.

**********

**பணி ஓய்வு**

திருச்சி அகில இந்திய வானொலி நிலையத்தின் வயலின் இசைக்கலைஞர் திருமதி T.H. வசந்தா இன்று பணி ஓய்வு பெறுகிறார்.

கடந்த 32 ஆண்டுகளாக இந்நிலையத்தில் அவர் பணியாற்றியுள்ளார்.

**********

**பேட்மிண்டன்**

பாரீஸில் நடைபெறும் உலக பேட்மிண்டன் சாம்பியன்பட்ட போட்டியின் மகளிர் ஒற்றையர் காலிறுதியில் இந்தியாவின் பி.வி.சிந்து இந்தோனேசியாவின் Wardani-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் ரான்கிரெட்டி சிராக்ஷெட்டி இணை – மலேசிய இணையை எதிர்கொள்கிறது.

**********

**ஹாக்கி**

பீகார் மாநிலம் ராஜ்கிரில் இன்று தொடங்கிய 12ஆவது ஆசிய கோப்பை ஆடவர் ஹாக்கி போட்டியில், நடப்பு சேம்பியன் இந்தியா தனது முதல் ஆட்டத்தில் - சீனாவை இன்று பிற்பகல் 3 மணிக்கு எதிர்கொள்கிறது.

இன்றுகாலை நடைபெற்ற ஆட்டங்களில் மலேசியா - பங்களாதேஷை 4-1 என்ற கோல் கணக்கில் வென்றது.

தென்கொரியா – சீன தைபே-யை 7-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

இந்தியா நாளை மறுநாள் ஜப்பானுடன் மோதுகிறது.

**********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

**********